[1980 ஜூலை 14

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : கைத்தறி—நெசவுத் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதற்கான சட்ட முன் வடிவு இங்கே அறிமுகம் செய்யப்பட்டு கூட்டாய்வுக் குழு பரிசீலனை செய்து தமிழகம் முழுவதும் சுற்றுப்பயணம் செய்து அதற்கு வடிவம் கொடுப்பதற்கு முன்னால் அரசு கலைக்கப் பட்டதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். விரைவில் அந்தச் சட்ட முன் வடிவை மீண்டும் அறிமுகப்படுத்தி வேண்டிய திருத்தங்களோடு எல்லா முயற்சிகளையும் இந்த அரசு எடுக்கும்.

திரு டி. ரமணி: தலைவர் அவர்களே, கடந்த ஆண்டில் இதுபோன்ற நாகர்கோவில் வட்டாரத்தில் ஒரு வேலை நிறுத்தம் ஏற்பட்டு பேச்சு வார்த்தையும் நடைபெற்றது. அந்தப் பேச்சு வார்த்தையில் கலந்து கொண்டு முதலாளிகள் இந்தப்பிரச்சினையை சுமுகமாகத் தீர்த்துக் கொள்ளலாம் என்று வாக்குறுதி கொடுத் தார்கள். அந்த வாக்குறுதி காப்பாற்றப்படாததன் காரணமாகத் தான் இப்போது மீண்டும் வேலை நிறுத்தம் ஏற்பட்டது. சம்பளம், போனஸ் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ளும் வகையில் லேபர் இலாக்காவும் உயர்மட்ட அதிகாரிகளும் பேச முன்வருவார் களா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: போனஸ் பொறுத்த வரை 1979—80, 1980—81, 1981—82 ஆண்டுகளில் 11 சதவிகிதம் என்று ஏற்பாடாகியிருக்கிறது. முதலாளிகள் தங்கள் வார்த்தைக் குக் கட்டுப்படாமல் இருப்பது காபிடலிஸ்ட் சொசைட்டிக்குள்ள குணம். இதைக் களைய சோஷலிஷ சித்தாந்தம் உள்ள அரசைக் கொண்டு வருகிறோம். இப்போதும் அப்படிப்பட்ட அரசு வந் திருக்கும் காரணத்தால் அந்தத் துறையில் தீவிரமாகப் பணியாற் றும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

TRUTH ALONE TRIUMPHS

3. தகவல் கோரல்.

ஒத்திவைப்புத் தீர்மான அறிவிப்புகள்.

திரு. ப. பொன்னுரங்கம் : தலைவர் அவர்களே, 55-வது விதியின்படி செங்கற்பட்டில் டெபுடி தாசில்தார் மகன் கொலை செய்யப்பட்டது பற்றி ஒரு. தீர்மானம் கொடுத்திருக்கிறேன்..

திரு. பொ. உத்திராபதி: நான் 55-வது விதியின்படி செங்கற் பட்டில் அரிசனங்களுக்கு ஏற்பட்ட கொடுமைகள் பற்றி ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன். ......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டிய பிரச்சினைகள் நிறைய இருக்கின்றன. இன்றைக்கு அவை முன்னவர் இல்லை. நாளையிலிருந்து ஒத்திவைப்புத் தீர்மானங்கள் வரிசையாக எடுத்துக் கொள்ளப் பெறும்.

திரு. மு. அம்பிகாபதி : தலைவர் அவர்களே, மன்னார்குடி தாலுக்காவிலேயும், பட்டுக்கோட்டை தாலுக்காவிலேயும் விவசாயிகளுக்குத் தண்ணீர் வரவில்லை என்று கொடுத்திருக்கிறேன். நீர்ப்பாசனம் சம்பந்தப்பட்ட மானியத்தின்போது பேசலாம் என்றால் அய்யர் எப்போது வருவது அதுவரையிலே அம்மாவாசை காத்திருக்குமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது போன்று உறுப்பினர்கள் கொடுத்துள்ள முக்கியமான முன்னறிவிப்புகள் குறித்தெல்லாம் அவர்கள் முன் கூட்டியே பேரவைத் தலைவரை அவரது அறையிலே சந்தித்துக் கேட்க வேண்டும். பேரவையில் கேட்கக் கூடாது. அடுத்து அரசினர் சட்ட முன் வடிவுகள்.

4. அரசினர் சட்ட முன் வடிவு

நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்சவரம்பு கட்டுதல்) இரண்டாவது திருத்த சட்ட முன்வடிவு 1980.

மாண்புமிகு திரு எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, தமிழ்நாடு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்ச வரம்பு கட்டுதல்) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: மிஸ்டர் ஸ்பீக்கர் சார், அமைச்சர் அவர்கள் அறிமுகப்படுத்துகிற இந்தச் சட்ட முன் வடிவை அறிமுகம் செய்கிற இந்த நேரத்திலேயே நான் எதிர்க்கிறேன். எதிர்ப்பதற்கான காரணங்களைச் சொல்ல விரும்புகிறேன். எங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள இந்தச் சட்ட முன்வடிவிலே சொல்லியிருக்கிறார்கள், 1958 சனவரி முதல் நாளன்றும் அல்லது அந்நாளைக்குப் பிறகும், 1960 ஏப்ரல் 6ஆம் தேதிக்கு முன்பும் செய்யப்பட்டிருக்கிற சில மாற்றங்கள் செல்திறனற்றவையாகும் என்று. கிட்டத்தட்ட 20, 22 ஆண்டுகளுக்கும் பிறகு 1958 ஆம் ஆண்டு சனவரி முதல் நாளிலிருந்து 1960 ஏப்ரல் 6 ஆம் தேதிக்கும் இடையே ஏற்பட்ட டிரான்ஸ்பர்கள், அது கிப்டாக இருந்தாலும் சரி, வேறு டிரான்ஸ்பராக இருந்தாலும் சரி அவையாவும் செல்திறனற்றவையாகும் என்று இந்த மன்றத்திலே ஒரு சட்டத்தைக் கொண்டு வர வேண்டிய அவசியமில்லை என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.